RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 56 | மார்ச்.4 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# தமிழ்நாட்டில் அகழ்வாராய்ச்சிக்கு ஒப்புதல் வழங்க பாஜகவுக்கு அச்சம் ஏன்? முதல்வர் ஸ்டாலின்

சென்னை: மார்ச்.4-

"தமிழ் நாகரிகத்தின் தொன்மை என்பது இந்தியாவுக்கு ஊறு விளைவிப்பதல்ல; இந்தியாவின் நாகரிகப் பண்பாட்டுக்குப் பெருமை சேர்ப்பது. எதைக் கண்டு பாஜக அரசு அஞ்சுகிறது? அகழ்வாராய்ச்சிக்கு ஒப்புதல் வழங்குங்கள். கீழடி பேசட்டும், வரலாறு மேலெழட்டும்!" என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "கீழடி, ஆதிச்சனூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட 8 இடங்களில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ள ஒன்றிய பாஜக அரசிடம் உடனடி ஒப்புதல் வேண்டித் தமிழ்நாடு அரசு கடிதம் அனுப்பி 8 மாதங்கள் ஆகின்றன.



இதற்கான முன்மொழிவுகள் ஜூலை 2025ல் அனுப்பப்பட்டு, நவம்பரில் இந்திய தொல்லியல் துறையின் தலைவர் தலைமையிலான கூட்டத்திலும் அது எடுத்துக்கொள்ளப்பட்டது. இருந்தும், 8 மாதங்களாகியும் ஒப்புதல் கிடைக்கவில்லை. மீண்டும், மீண்டும் நாங்கள் கோரிக்கை வைக்கிறோம். மீண்டும், மீண்டும் அது கண்டுகொள்ளப்படாமல் இருக்கிறது.

தமிழ்நாட்டில் அகழ்வாராய்ச்சியை மேற்கொள்வதற்கு உகந்த காலம் என்பது ஜனவரி முதல் ஜூலை வரைதான். இதைத் தவறவிட்டால், பருவமழையினால் களப்பணிகள் தடைபடும், முக்கிய ஆராய்ச்சிகள் தாமதமாகும், 20252026ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியும் வீணாகும்.

நான் கேட்க விரும்புவதுஞ் ஏன் இந்தத் தயக்கம்? தமிழ் நாகரிகத்தின் தொன்மை என்பது இந்தியாவுக்கு ஊறு விளைவிப்பதல்ல; இந்தியாவின் நாகரிகப் பண்பாட்டுக்குப் பெருமை சேர்ப்பது. எதைக் கண்டு பாஜக அரசு அஞ்சுகிறது? அகழ்வாராய்ச்சிக்கு ஒப்புதல் வழங்குங்கள், வரலாறு பேசட்டும்!" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## "பாஜகவை எதிர்த்துப் பேச விஜய்க்கு பயம்"

### திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன்

சென்னை: மார்ச்.4-

"திமுக காங்கிரஸ் கூட்டணி விவகாரத்தை சுமுகமாக முடிக்கவே எங்கள் தலைவர் விரும்புவார். இன்று மாலைக்குள் நல்ல செய்தி வரும். பாஜகவை எதிர்த்துப் பேச விஜய் பயப்படுவார்" என திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "அவர்கள் (காங்கிரஸ்) கேட்பது வேறு, நாம் (திமுக) சொல்வது வேறு. திமுக காங்கிரஸ் கூட்டணி விவகாரத்தை சுமுகமாக முடிக்கவே எங்கள் தலைவர் (முதல்வர் ஸ்டாலின்) விரும்புவார். காங்கிரஸார் இப்போது பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கிறார்கள் என்றாலே பழைய நிலைப்பாட்டில் இருந்து மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் பொருள்.



இன்று மாலைக்குள் நல்ல செய்தி வரும்.

தவெகவினருக்கு அரசியலே தெரியாது. விஜய் முதல்வராக வேண்டும் என்ற ஒற்றைக் குறிக்கோளோடு வந்திருக்கிறார். அவரின் கேள்விகளுக்கு நாங்க பதில் கூற முடியாது. அவர் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென அரசியலுக்கு வரவில்லை. தைரியம் இருந்தால் விஜய் மணிப்பூரை பற்றி பேசட்டும். பாஜகவை எதிர்த்துப் பேச விஜய் பயப்படுவார்" என்றார்.

நாங்குநேரி கொலை சம்பவம் குறித்து கூறும்போது, "சட்டம் தன் கடமையை செய்கிறது. எந்தக் குற்றவாளியும் தப்பிக்கவில்லை. எடப்பாடி முதல்வராக இருந்த காலத்தில், கோடநாட்டில் கொள்ளையடித்தவர்கள் கூட தப்பிவிட்டார்கள். திமுக ஆட்சியில் காவல் துறைக்கு ஒரு புகார் வந்தால் கூட, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது" என்று அவர் தெரிவித்தார்.

## 'முதல்வர் ஸ்டாலின் தூக்கத்தில் இருந்து எழுவாரா?' நாங்குநேரி சம்பவத்தில் இபிஎஸ், விஜய் கண்டனம்

சென்னை: மார்ச்.4-

நாங்குநேரி கொலை சம்பவம் தமிழகத்தில் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ், தவெக தலைவர் விஜய் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

எடப்பாடி பழனிசாமி: நாங்குநேரி அருகே பெரும்பட்டு கிராமத்தில் அரங்கேறியுள்ள கொடூரம் ஏற்க முடியாத பெருங்குற்றம். பட்டியலின மக்கள் அதிகம் வசிக்கும் அந்த கிராமத்திற்குள் புகுந்த 9 பேர் கொண்ட மர்மகும்பல், அங்குள்ள தேநீர் கடை மீது பெட்ரோல் குண்டு வீசி நடத்திய கொலைவெறித் தாக்குதலில் இருவர் பரிதாபமாக உயிரிழந்து, 6 பேர் படுகாயத்துடன் சிகிச்சை பெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சட்டம் ஒழுங்கை ஒரு பொருட்டாக கருதாமல் விளம்பர ஆட்சி நடத்திய திமுக அரசின் அலட்சிய போக்கின் விளைவு தான் இந்த கொடூரக் கொலைகள். இது தங்கள் சமூகத்தைக் குறிவைத்து நடந்த தாக்குதல் எனவும், தங்களுக்கு பாதுகாப்பு இல்லை எனவும் அச்சத்துடன் போராடி வருகின்றனர் அக்கிராமத்தைச் சேர்ந்த பட்டியலின மக்கள். இதே





நாங்குநேரி தொடங்கி, தென் மாவட்டங்களில் தொடர்ந்து நடக்கும் சமூக ரீதியான மோதல்களை தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தது திமுக அரசு? வேடிக்கை மட்டும் தானே பார்த்துக்கொண்டு இருந்தது?

தொடர்ந்து இப்பகுதியை பதற்ற நிலையிலேயே வைத்திருக்க வேண்டுமென்பது தான் திமுக அரசின் எண்ணமா? தேர்தல் நேர அறுவடைக்கு சமூக மோதல்களை வளர்த்து விடுகிறதா திமுக? என்ற கேள்விகளும் சந்தேகங்களும் மக்களிடையே எழுகிறது. வாய்கிழிய மேடைகளில் சமத்துவம் என்று பேசும் திமுக, தனது ஆட்சியில் சமூக மோதல்களைக் கட்டுப்படுத்தாமல் வேடிக்கை பார்ப்பது வெட்கக்கேடானது; கடும் கண்டனத்திற்குரியது. பெரும்பட்டு தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளிகள் அனைவர் மீதும் மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறோம்.

விஜய்: திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி அருகே பெரும்பத்து கிராமத்தில் நேற்றிரவு இருசக்கர வாகனங்களில் சென்ற 9 பேர் கொண்ட கும்பல், சாலையில் சென்றவர்கள், டீக்கடை அருகே நின்றவர்கள் மீது ஆயுதங்களால் சரமாரியாகத் தாக்கியதில் இருவர் உயிரிழந்தனர். 5 பேர் வெட்டுக் காயம் அடைந்தனர் என்று வெளியான செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. இந்தக் கொலைவெறித் தாக்குதல், கடும் கண்டனத்திற்கு உரியது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, படுகாயம் அடைந்தவர்கள் விரைந்து குணமடைய விழைகிறேன்.

உலக நாடுகளுடன் போட்டி போடும் ஓர் ஆட்சியில் பொதுமக்களின் உயிருக்கு உத்தரவாதம் எங்கே? இந்தியாவின் டாப் மாநிலத்தில் காவல் துறைக்குச் சட்டம் ஒழுங்கு டிஜிபி எங்கே? நம்பர்1 மாநிலம் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் ஆட்சியின் சட்டம் ஒழுங்கு லட்சணம் இதுதானா? போதைக் கும்பல் சுதந்திரமாக வன்முறை நிகழ்த்த இடம் தந்த பொறுப்புமிக்க ஆட்சி இதுதானா?

பொதுமக்கள் ஒவ்வொரு நாளும் புலம்பித் தவித்துக் கோபத்தில் கொந்தளித்துக் கேள்வி எழுப்பி வருகின்றனர். ஆட்சியே முடியப் போகிறது. இப்போதாவது காவல் துறையைக் கையில் வைத்திருக்கும் முதல்வர் தூக்கத்தில் இருந்து எழுவாரா? மக்கள் நலன்களை, அவர்தம் பாதுகாப்பைத் துளியும் யோசிக்காத இந்தத் திமுக ஆட்சி, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் தூக்கி எறியப்படுவது உறுதி உறுதி உறுதி.

## "சிறப்பு நிதி எனும் திமுகவின் தேர்தல் சித்து விளையாட்டு எடுபடாது" : தினகரன்

சென்னை: மார்ச்.4-

'சிறப்பு நிதி எனும் திமுகவின் தேர்தல் கால சித்து விளையாட்டுக்கள் பொதுமக்கள் மத்தியில் எடுபடாது. திடீர் பாதுகாவலர் வேஷம் போடும் திமுகவை வீட்டிற்கு அனுப்பும் முடிவிலிருந்து தமிழக மக்கள் பின்வாங்க மாட்டார்கள்' என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழக அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாத ஒய்வூதியம் மற்றும் உதவித் தொகை பெற்று வரும் முதியோர், கைம்பெண்கள், திருநங்கையர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு 2 ஆயிரம் ரூபாய் சிறப்பு நிதியாக வரவு வைக்கப்பட்டிருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக திமுக வழங்கிய



தேர்தல் அறிக்கையில் 322வது வாக்குறுதியான முதியோர் உதவித் தொகை 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்ற வாக்குறுதியை ஆட்சி நிறைவடையும் தறுவாயிலும் நிறைவேற்றாமல் ஏமாற்றிக் கொண்டிருக்கும் திமுக அரசு, தற்போது சிறப்பு நிதி எனும் பெயரில் 2000 ரூபாய் வழங்கியிருப்பது முழுக்க முழுக்க ஏமாற்று வேலையே ஆகும்.

அண்டை மாநிலங்களைப் போல மாதாந்திர உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என ஜனநாயக ரீதியில் போராடிய மாற்றுத்திறனாளிகளின் மீது காவல்துறையை ஏவி அடக்குமுறைக்கு உள்ளாக்கிய திமுக அரசு, தேர்தல் நெருங்கும் நேரத்தில் இதுபோன்ற அறிவிப்புகளை வெளியிடுவதன் மூலம், மக்கள் நலனுக்கான நிரந்தர தீர்வை எட்டுவதை விட்டுவிட்டு அவர்களை வெறும் தேர்தல் நேர வாக்குவங்கியாக மட்டுமே பார்ப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

எனவே, கடந்த ஐந்தாண்டுக் கால இருண்ட ஆட்சியில் அனைத்து தரப்பு மக்களையும் வாட்டி வதைத்துவிட்டு தற்போது திடீர் பாதுகாவலர் வேஷம் போடும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் இதுபோன்ற தேர்தல்கால சித்து விளையாட்டுக்களை நம்பி தமிழக மக்கள் ஏமாற மாட்டார்கள் என்பதோடு, வரும் தேர்தலில் திமுவை வீட்டிற்கு அனுப்பும் முடிவிலிருந்து துளியளவும் பின்வாங்க மாட்டார்கள் என்பதையும் இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்தார்.



## நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி நாம் தமிழர் கட்சி சார்பாக கலந்தாய்வு கூட்டம்

நிலக்கோட்டை மார்ச். 04-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் சட்ட தொகுதியின் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் டாக்டர்.கயிலை ராஜன் தலைமையில் தொகுதி அளவிலான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது,

கூட்டத்தில் பல்வேறு ஆலோசனை வழங்கிய அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,...

நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதி தனித் தொகுதி என்பதால் இரண்டு திராவிட கட்சிகளும் புறக்கணிக்கிறது, இதனால் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கூட இன்றி இதுவரை 15% வளர்ச்சி கூட அடையவில்லை,எந்தவித பொருளாதார முன்னேற்றமும் அடையவில்லை,அதே பஸ் நிலையம், அதேபோல் விவசாயிகளின் அவல நிலைதான் உள்ளது, நிலக்கோட்டை தாலுகாவின் பிரதான நீராதாரமான மஞ்சலாறை அழித்துவிட்டனர், பூக்கள் பழங்கள் பதப்படுத்தும் நிலையம், வத்தலக்குண்டுவில் ஆண்கள் கலைக் கல்லூரி கொண்டு வர வேண்டும், வத்தலகுண்டு,நிலக்கோட்டை அரசு மருத்துவமனைகளை நவீன சிகிச்சை மருத்துவமனைகளாக மாற்ற வேண்டும்,பண பொருளாதரத்தை தவிர்த்து இயற்கை வளங்களை பயன்படுத்தி தற்சார்பு பொருளாதாரத்தை ஊக்கப்படுத்த வேண்டும், திமுக 5000 கொடுத்தாலும் ஓபிஎஸ்சை சேர்த்தாலும் எதுவும் மாறப்போவதில்லை.

நிச்சயமாக வருகிற சட்டமன்ற 2026 நாம் தமிழர் கட்சியினர் அதிக அளவு வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிப்போம் என பேசினார்.



## தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சியில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட புதிய நிர்வாகிகள் நியமனம்

திண்டுக்கல் மார்ச்.4-

திண்டுக்கல் மேற்கு மாவட்டம் பழனியில். தேர்தல் அறிவிப்பை தொடர்ந்து தென்னிந்திய பார்வர்ட் பிளாக் கட்சி, அதன் தலைவர் கே.சி. திருமாறன் தலைமையில், கட்சியை வலுப்படுத்தும் நோக்கில் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் புதிய நிர்வாகிகளைத் தொடர்ந்து நியமித்து வருகிறது. கொங்கு மண்டலம் போன்ற முக்கியப் பகுதிகளில் புதிய நிர்வாகிகள் இணைக்கப்பட்டுள்ளனர். தேர்தல் பணிகளை மிக விரைவாக செயல்படுவதற்கும். கட்சி வளர்ச்சி பணிக்கான பாதையை விரிவுபடுத்தும் நோக்கில் முழு மூச்சாக பாடுபட்டு வரும் சமூக நீதி போராளியாக வலம் வந்து கொண்டிருக்கும் பொதுச்செயலாளர் சபரி வலியுறுத்தலின்படி மற்றும் மாநிலத் தலைவர் சின்னமனூர் ராஜேஷ் அறிவிப்பின்படி. திண்டுக்கல் மாவட்டத்தில் புதிய நிர்வாகிகளாக. மேற்கு மாவட்ட பொது செயலாளர் பழனிவேல். மாவட்டச் செயலாளராக மணிகண்டன். பழனி நகர தலைவராக பெருமாள். மாநில தகவல் தொழில்நுட்ப பொதுச் செயலாளராக கள்ளேந்திர அஜித். போன்றவர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது அக்கட்சியின் நிறுவனர் புதிய நிர்வாகிகளுக்கு மாநில மாவட்ட நகர ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் முழு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

# பிடாரிசேரி கைலாசநாதர் கோவிலில் 108 மூலிகைகள் அபிஷேக திருவிழா சிறப்பாக நடைபெற்றது







மானாமதுரை மார்ச். 04-

ராமநாதபுரம் மாவட்டம் பரார்த்திபனூர் அருகே உள்ள பிடாரிசேரி கிராமத்தில் உள்ள ஸ்ரீ கைலாசநாதர் கோவிலில் மாசி பிரதோஷ வழிபாடு

108 மூலிகைகள் அபிஷேகம் விழா நடைபெற்றது. மதுரை ஆலவாயர் அருட் பணிமன்றம் சார்பில் நடைபெறும 158 ஆன்மிக ஆலய பயணத்தில் அடியார் பெருமக்கள் பிடாரி சேரி கைலாசநாதர் கோவிலுக்கு வருகை தந்து

இப்பெருந்திருவிழாவில் கோவில் நிர்வாகம்அடியார் பெருமக்கள் பிடாரிசேரி ஊரின் சுற்றுப்புற கிராம பொதுமக்கள், சிவனடியார்கள் ஆலவாயர் அருட்பணி மன்றத்தின் அடியார் பெருமக்கள் ஒருங்கிணைந்து வழிகாட்டுதலோடும் சிறப்பான ஏற்பாட்டின்படி காலை

பசுக்கள் வழிபாடு கோபூஜையுடன் தொடங்கியது. தொடர்ந்து பக்தர்கள் தங்கள் கைகளில் கலந்த

108 மூலிகை கலசத்துடன் ஊர் வலம் வந்து தொடர்ந்து திருமுறை பாராயணம் விண்ணப்பம் நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து

பொன்குழந்தைகள் பாதபூசையும் சிறப்பு மூலிகைகள் அபிஷேகம் நடைபெற்றது.

விரைவில் திருப்பணி நடந்து குடமுழுக்கு நடைபெற வேண்டி பிரத்தனையுடன் கூடிய கூட்டு வழிபாடு தொடர்ச்சியாக பிரதோச வழிபாடு நடைபெற்றது. பக்தர்கள் அனைவருக்கும் சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. பார்த்திபனூர் வழியாக திருவில்லிபுத்தூர் செல்லும் சாலையில் பிடாரிசேரி கைல ாசநாதர் திருக்கோவில் உள்ளது.

# சிவகங்கை மாவட்ட மகளிரணி பாக்ய லெட்சுமி தலைமையில் வெல்லும் தமிழ்ப் பெண்கள்



சிவகங்கை மார்ச். 04-

சிவகங்கை மாவட்டம் முழுவதும் ஸ்டாலின் பெண்கள் படைகளைச் சேர்ந்த பெண்கள் தீவிர களப்பாணியாற்றி வருகின்றனர். அதனடிப்படையில் சிவகங்கை நகரச் செயலாளர். நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை ஆனந்த் ஆலோசனையின் பேரில் சிவகங்கை நகர் 19 வார்டுப் பகுதியில் நகர்மன்ற உறுப்பினரும் . சிவகங்கை திமுக மகளிரணி மாவட்ட துணை அமைப்பாளருமான பாக்கியலெட்சுமி விஜயகுமார் தீவிர பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அந்த வார்டுப்பகுதிகளில் உள்ள பெண்களிடம் உறவு முறை வைத்து பேசும் பாங்கு . அவர்களிடம் அணுகும் எளிமையான முறை . தவிர தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் மற்றும் திட்டங்களை பட்டியலிட்டு எடுத்துக்கூறும் தன்மை என மிகவும் வார்டுப் பகுதி மக்களிடம் அசத்தி வருகிறார்...

இதை அந்த பகுதியில் உள்ள இல்லத்தரசிகள் வெகுவாக ரசிக்கின்றனர்...

இதனிடையே நம்மிடம் பேசிய கவுன்சிலர் பாக்ய லெட்சுமி விஜயகுமார் நமது கழகத்தலைவர் . தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சியின் மக்கள் நலத்திட்டங்கள் . சாதனைகள் . பெண்களின் வாழ்க்கை மேம்பாடு . எங்களது தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்களது வழிகாட்டல் இப்படி எல்லாமே சேர்ந்து அடுத்த ஆட்சியும் எங்களது ஆட்சிதான் எனவும் பெருமிதம் தெரிவித்தார்...

# பச்சேரி சி.ஆர்.சுந்தரராஜன் வள்ளலாகவே வாழ்கிறார். அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் புகழாரம்



சிவகங்கை மார்ச். 04-

சிவகங்கை வேம்பத்தூர் அருகேயுள்ள பச்சேரி கிராமத்தில் சி.ஆர்.ரெத்தினம்பிள்ளை சரஸ்வதி அம்மாள் ஆகியோரது மகனாகப் பிறந்தவர் தான் சி.ஆர்.எஸ்.என்ற சி.ஆர்.சுந்தரராஜன் ஆவார்...

பொதுவாகவே இளம் வயது முதலே உதவி செய்யும் மனம் கொண்ட சுந்தர்ராஜன் அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு தமிழ்நாடு மாநில பொதுச்செயலாளர் பொறுப்பு வகித்து வருகிறார்...

இவர் ஏழை எளிய மக்களின் தேவைகளை அறிந்து அவர்களின் வாழ்வு மேம்பட பற்பல உதவிகளை செய்து வருகிறார்...

இதேபோல இவரது மனைவி விஜயலட்சுமி. . உடன்பிறந்த சகோதரர்களான சி.ஆர். பார்த்தீபன் . சி.ஆர். வெங்கடாச்சலம். . சி.ஆர்.நாகேந்திரன் . ஆகியோரும் . அவரது புதல்வர்களான சி.ஆர். எஸ்.கணேஷ்பாபு. சி.ஆர். எஸ்.கார்த்திக்பாபு. .சி.ஆர். எஸ். விஜய் . மற்றும் சில.ஆர்.பி.ரெத்தினக்குமார் மற்றும் அஞ்சூர் செல்வி கோவில் அறங்காவலர். மானாமதுரை வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் பச்சேரி அழ.கணேசன் ஆகியோரும் இணைந்து இரவு பகல் பாராது உழைத்து. இன்முகத்துடன் அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர்...

வள்ளல் சுந்தரராஜன்

குறிப்பாக சுற்று வட்டார கிராமப் பொதுமக்களுக்கு கல்வி. . திருமண உதவிகள். கோவில் திருவிழாக்கள் . குடமுழுக்கு . ஆயிரக்கணக்கானோருக்கு அன்னதானம். உயர் மின் கோபுர விளக்குகள். பயணியர் நிழற்குடை உள்ளிட்ட நல்ல பல விசயங்களை விளம்பரமே இல்லாமல் செய்து வருகிறார்...

நேற்றைய முன்தினம் சிவகங்கை மதகுபட்டி அருகேயுள்ள ஆறூர் வட்டகை நாடு கீழப்பூங்குடி கிராமத்தில் சுந்தர்ராஜன் பல கோடி மதிப்பீட்டில் ரூபாய் தனது சொந்த செலவில் பதினைந்திற்கும் மேற்பட்ட நிறைவுற்ற நலத்திட்டங்களை தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன். நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மேனாள் அமைச்சர் ப.சிதம்பரம். மக்களவை உறுப்பினர் கார்த்திக் ப.சிதம்பரம். சட்டமன்ற உறுப்பினர்களான மானாமதுரை முன்னாள் அமைச்சர் ஆ.தமிழரசி ரவிக்குமார். காரைக்குடி எஸ்.மாங்குடி ஆகியோரை வைத்து தொடங்கி வைக்கவும் . பத்தாயிரம் பொதுமக்களுக்கு அறுசுவை அசைவ அன்னதான விருந்து நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்திருந்தார்...

இதனிடையே அந்தேதாணி கலைக்குழுவினரின் ஆடல் பாடல் இன்னிசைக் கச்சேரி உள்ளிட்ட நாட்டுப்புற கலைகள் நிகழ்ச்சி நடைபெற்றது...

கீழப்பூங்குடி . மேலப்பூங்குடி. நாமனூர் ஆகிய கிராமங்களில் உயர் மின் கோபுர விளக்குகள். தமறாக்கியில் பயணியர் நிழற்குடை. பேவர் பிளாக் சாலை உள்ளிட்ட பொதுமக்களின் நலன்கருதி தனது சொந்த செலவில் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது...

பள்ளி மாணவர்களின் நலன் கருதி மடிக்கணினி. தொலைக்காட்சி உள்ளிட்ட பொருட்களும் வழங்கப்பட்டது...

நலத்திட்டங்களை தொடங்கி வைத்து பேசிய அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பச்சேரி சி.ஆர்.சுந்தரராஜன் எப்பொழுதும் வள்ளல் சுந்தர்ராஜன் என்றே அழைக்கப் படுவார் எனவும் புகழாரம் கூறினார்...

சுந்தர்ராஜனின் சுயநலமில்லா மக்கள் சேவைகளை

சுற்றுவட்டாரப் பொதுமக்கள் பலரும் வெகுவாக பாராட்டி வருகின்றனர்...

சாதி மத வேறுபாடின்றி மிகவும் எளிமையாகக் பழகிடும் குணம் கொண்ட சி.ஆர்.சுந்தரராஜன் இரவு பகல் பாராது அங்கேயே தங்கி ஏற்பாடுகளை முழுமையாக பார்வையிட்டு மேற்கொண்டு வந்தார். மிகுந்த பொருட்செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சியில் மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் வழக்கறிஞர் சஞ்சய் காந்தி தலைமையேற்று நடத்தினார்...

மேனாள் அமைச்சர் தென்னவன் . மாவட்ட துணைச் செயலாளர் சேர்மன் சேங்கைமாறன். . சட்டமன்ற மேனாள் உறுப்பினர் இராஜசேகரன் . பொதுக்குழு உறுப்பினர்களான வேலுநாச்சியார் அரிமா சங்க பட்டயத் தலைவர் வித்யா கணபதி. தொகுதி பார்வையாளர் சோனை.

காங்கிரஸ் வட்டார தலைவர்களான துணைத்தலைவர் சண்முகராஜன் . கரும்பாவூர் உடையார். காளையார்கோவில் மதியழகன். சிறுபான்மை சையது இபுறாஹீம் அல்லூர் குரு.கணேசன். மாவட்ட மேனாள் கவுன்சிலர் ஆரோக்கிய சாந்தா சகாயராணி. ஒக்கூர் காளீஸ்வரி. திமுக ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம். கண்டாங்கிபட்டி மந்தக்காளை .

துரை.இராஜாமணி . காளையார்கோவில் வடக்கு ஆர்.எம். கென்னடி. அ.முத்துச்சாமி ஆகியோரும் சிவகங்கை மாவட்ட திமுக செய்தித் தொடர்பாளர் கவுன்சிலர் அயூப் கான் . மகளிரணி மாவட்ட நிர்வாகிகளான பவானி கணேசன். கதிர் இராஜ்குமார் . வழக்கறிஞர் பாஸ்கரன். ம.சிங்கமுத்து. ஆ.மு.சண்முகநாதன். மாவட்ட இளைஞரணி சேதுபதி ராஜா . வழக்கறிஞர் அல்லூர் உமாசங்கர். திருமலை குமணன் .மேப்பல் அழகப்பன் . அரசனூர் ஊராட்சி முன்னாள் தலைவர் செல்வராணி அய்யப்பன் . மானாமதுரை தொகுதி மகளிரணி பொறுப்பாளர் வளர்மதி கலைச்செல்வன். சிவகங்கை நகர திமுக பொருளாளர் ஆர்.எஸ்.முத்துராக்கு. . கவுன்சிலர் ஜெயகாந்தன் . எம்எல்ஏ.சுப.ஜெயக்குமார். ஆறு . சரவணன் .இராமதாஸ் . மாவட்ட ஐடி விங் வாடிவாசல் முத்துவேல் செல்வம் . தமறாக்கி ஊராட்சி மேனாள் தலைவர் ரவி. கழக மூத்த முன்னோடி நாட்டரசன் கோட்டை . ரைஸ் மில் கணேசன். வேம்பத்தூர் ஊராட்சி தலைவர் மாவட்ட திமுக பிரதிநிதி வி.எம்.சமயமுத்து . காங்கிரஸ் மாநில எஸ்சி . எஸ்டி செயலாளர் முரளீஊரன் . ஒக்கூர் சோமசுந்தரம் . கிராமத் தலைவர் ஓய்வு பெற்ற அரசு அலுவலர் பொன். மலையான். திருமலை மணிமாறன். வழக்கறிஞர் கோதண்டராமர். அல்லூர் நீர்ப்பாசன சங்க தலைவர் அல்லூர் ரவிச்சந்திரன்.ஒன்றியப் பிரதிநிதி அல்லூர் சங்கரலிங்கம் . அல்லூர் முனீஸ்வரன். ஐடி விங் அம்பலம். கீழக்கோட்டை கண்ணன்.தேவாரம்பூர் ராமநாதன் . சோழபுரம் மாரி. கீரனூர் தமிழ்ச்செல்வம் . துரை. செல்லபாண்டி . இளைஞரணி நிர்வாகிகள் இடையமேலூர் வேல்முருகன். மானாமதுரை வேங்கை சுந்தர். வேங்கை பாண்டி .மாணவரணி திருமலை ஏழுமலைச்சாமி

கீழப்பூங்குடி கிளைச் செயலாளர் தினகரன். உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்...

அசைவ அன்னதான விருந்தில் கம் கம் மட்டன் பிரியாணி. சிக்கன். முட்டை என தடபுடலாக விருந்து நடைபெற்றது...

இந்த விருந்து வைபவத்தில் ஏறத்தாழ சிவகங்கை சுற்றுவட்டார பொதுமக்கள். குழந்தைகள் மற்றும் பெண்கள்.என ஏராளமானோர் பங்கேற்று . வாயார வாழ்த்திச் சென்றனர்...

விழா நிகழ்ச்சி ஏற்பாடுகளை பச்சேரி வள்ளல் சி.ஆர்.சுந்தரராஜன் குடும்பத்தினர் மிகவும் சிறப்பாக செய்திருந்தனர்..

# சிவகங்கை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு பொதுக்குழு கூட்டம்




சிவகங்கை மார்ச். 04-

சிவகங்கை மாவட்டம் புதுவயல் அம்பேத்கார் நகரில் 1.3.2026 ல் மாநில ஆதிதிராவிடர் நல விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழ கூட்டமைப்பிண்பொதுக் குழ கூட்டமானது ஆறு. வீரசேகர் தலைமையில் கொத்தமங்கலம் சுப்பிரமணியன் முன்னிலையிலும் நடைபெற்றது ...

காந்தி வரவேற்புரை நிகழ்த்திடநடைபெற்ற இந்த கூட்டத்தில். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானம்!. தாட்கோவில் வழங்கப்படும் திறன் பயிற்சிகள் அந்தந்த மாவட்டத்திலேயே வேலை வாய்ப்புடன் கூடிய பயிற்சியாக வழங்க வேண்டும்...

தீர்மானம் 2. பொதுப்பணி மற்றும் , நகராட்சி, பேருராட்சி, அரசுத்துறையின் ஒப்பந்தங்களில் 18% ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கிட வேண்டும். தீர்மானம் ...

.3. ஆதிதிராவிடர் நலத்துறையில் . துப்புரவு பணிகள் நியமனம் கணினி ஆப்ரேட்டர் நியமணம் பணிகளுக்கு வெளிமுகமை ஏஜன்ஸியாக ஆதிதிராவிடர் நடத்தும் ஏஜன்ஸிக்கு முன்னுரிமை வழங்கி அந்த ஏஜன்சிகளே தேர்வு செய்ய அரசு அரசாணை பிறப்பிக்கப்பட வேண்டும்...தீர்மானம் 4. கரைக்குடியில் தற்போது வேளான்மை கல்லூரி, சட்டக்கல்லூரி ஆகிய கல்லூரிகள் துவங்கப்பட்டு நடைபெற்றுவருகிறது. அக்கல்லூரியில் பயிலும் ஆதிதிராடர் மாணவிகள் தங்கி பயில பெரிய விடுதி கட்டிடம் கட்ட அரசிடம் நமது அமைப்பின் சார்பாக மனுக் கொடுக்க வேண்டி தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது...

தீர்மானம் 5. வீடில்லா விளிம்பு லை மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா பெறுவதற்கு மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரை நாடி மனுக் கொடுக்க வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாநில தலைவர் பூமிநாதன் மாநில பொதுச் செயலாளர் பெரியார் இராமு மாநில பொருளாளர் காந்தி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாலு எக்ஸ் மிலிட்டரி நகர அமைப்பாளர் மதியழகன் எம்சி. மெய்யரசு மற்றும் அம்பேத்கர் நகர் மகளிரணியினரும் இளைஞ ர்களும் அதிகம ாக இந்த அமைப்பின் உறுப்பினராகவும் நிர்வாகிகளாகவும் தங்களை இணைத்துக்கெ ாண்டனர். இறுதியாக கண்ணகி நன்றி தெரிவித்து கூட்டம் இனிதே முடிவுற்றது...

## வருவாய் கோட்டாட்சியர் சிவகங்கை

**ந. க. ஆ 3/109/2026**

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம் பனங்காடி அல்லூர் என்ற முகவரியில் வசித்து வரும் திரு. மணி (த/பெ. வெள்ளையன்) என்பவரின் தந்தை வெள்ளையன் (த/பெ.வீரணன் ) என்பவர் கடந்த 08.06.1985 அன்று அல்லூர் கிராமத்தில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்பட்டவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மனுதாரர்
திரு. மணி
எதிர்மனு
வருவாய் கோட்டாட்சியர் சிவகங்கை

## உயர்திரு வருவாய் கோட்டாசியர் அவர்கள், திண்டுக்கல்

கணேசன்
த/பெ. அழகுமலை (லேட்), 8/242, மேற்கு தெரு கொங்கபட்டி எத்திலோடு நிலக்கோட்டை தாலுகா திண்டுக்கல் மாவட்டம் 624219
...மனுதாரர்

எதிர்

1. வருவாய் கோட்டாசியர் அவர்கள் திண்டுக்கல்.
2. வருவாய் வட்டாட்சியர் நிலக்கோட்டை..

....எதிர்மனுதார்

பொது அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் மகள் அழகுப்பிள்ளை அவர்கள் கடந்த 20.08.2012 அன்று 8/242, மேற்கு தெரு கொங்கபட்டி எத்திலோடு நிலக்கோட்டை தாலுகா திண்டுக்கல் மாவட்டம் 624219 என்ற விலாசத்தில் இயற்கை மரணம் அடைந்ததற்கான இறப்பு சான்றிதழ் கோரி விண்ணப்பித்துள்ளார். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின், இவ்வறிவிப்பு கண்ட 7 நாட்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரர் கோரியபடி மனு உத்தரவாகும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**வருவாய் கோட்டாசியர் திண்டுக்கல் மாவட்டம்**

# சென்னையில் கேரளா சட்டக்கல்லூரி மாணவி மூளை சிதறி பலி

## சக மாணவி உட்பட 3 மாணவர்கள் படுகாயம்

சென்னை: மார்ச்.4-

சென்னை அண்ணா பல்கலைக்கழகம் எதிரே முன்னால் சென்ற காரை முந்தி செல்லும் போது ஏற்பட்ட விபத்தில் காரில் சென்ற கேரளாவை சேர்ந்த சட்டக்கல்லூரி மாணவி ஒருவர் மூளை சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காரை ஓட்டி வந்த மாணவன் அப்ரரூல் ஆர்த்திப் மற்றும் ஊட்டியை சேர்ந்த பிரியா, கோவையை சேர்ந்த ஜெகதீப் ஆகியோர் காயங்களுடன் உயிர்தப்பினர். 3 மாணவர்கள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**present sale for all over Tamil Nadu**

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## வருவாய் கோட்டாட்சியர் சிவகங்கை

**ந. க. பி 1/417/2026**

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், பாகனேரி கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் திருமதி. செல்வி (க /பெ. ஈஸ்வரன்) என்பவரின் தயார் லேட். இந்திரா (க /பெ.நடராஜன் ) என்பவர் கடந்த 02.06.1986 அன்று சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் பாகனேரி பஞ்சாயத்து பாகனேரி கிராமத்தில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்பட்டவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மனுதாரர்
திருமதி. செல்வி
க. பெ. ஈஸ்வரன்
கதவு எண் 43
வடக்கு தெரு
கிராப்பட்டி
திருச்சிராப்பள்ளி

எதிர்மனு
1. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய்கோட்டாட்சியர் அலுவலகம்
சிவகங்கை
2.சார் பதிவாளர் அவர்கள்
சார் பதிவாளர் அலுவலகம்
மதகுபட்டி.

## வருவாய் கோட்டாட்சியர் சிவகங்கை

**ந. க. பி 1/416/2026**

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், பாகனேரி கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் திருமதி. செல்வி (க /பெ. ஈஸ்வரன்) என்பவரின் தந்தை லேட். நடராஜன் (த/பெ.காளையப்பன் ) என்பவர் கடந்த 23.11.1983 அன்று சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் பாகனேரி பஞ்சாயத்து பாகனேரி கிராமத்தில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்பட்டவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மனுதாரர்
திருமதி. செல்வி
க. பெ. ஈஸ்வரன்
கதவு எண் 43
வடக்கு தெரு
கிராப்பட்டி
திருச்சிராப்பள்ளி

எதிர்மனு
1. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய்கோட்டாட்சியர் அலுவலகம்
சிவகங்கை
2.சார் பதிவாளர் அவர்கள்
சார் பதிவாளர் அலுவலகம்
மதகுபட்டி

# குன்னூர் நகரமன்ற துணை தலைவர் மு.வாசிம் ராஜா விருப்பமனு



குன்னூர், மார்ச்.4-

நகர செயலாளர் எம்.இராமசாமி, மேலூர் ஒன்றிய செயலாளர் A.T.லாரன்ஸ், உதகை தெற்கு, கிழக்கு ஒன்றிய செயலாளர் ணி.லி.பரமசிவம், உலிக்கல் பேரூர் கழக செயலாளர் K.P.L.ரமேஷ், வெலிங்டன் நகரிய கழக செயலாளர் மார்ட்டீன், நெல்லியாளம் நகர செயலாளர் சேகர், பந்தலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சுஜேஷ், விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணை செயலாளர் ஜெசிகா, மாவட்ட துணை செயலாளர் தமிழ்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள் பில்லன், லியாகத் அலி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் T.K.S. பாபு, நௌபல், நாகராஜ், மு.பத்மநாபன், முரளிதரன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆலன், ராம்குமார், ஆல்வின், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.மணிகண்டன், ராமச்சந்திரன், V.சி.குமார், நெல்லியாளம் நகரமன்ற தலைவர் சிவகாமி, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஜாஹீர் உசேன், K.T.N.பாரதி, தினேஷ், நந்தக்குமார், தம்பு (â) ஆனந்த்குமார், இன்பராஜ், ஜெய்விக்னேஷ், தமிழரசன், நகர, ஒன்றிய நிர்வாகிகள் ஆனந்த்குமார், அப்துல் காதர், குமரேசன், பொன்ராஜ், சண்முகம், எட்வின், மஹி, மணி, ஞானசேகர், நகர, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் சையது மன்சூர், சிவசங்கர், ராகுல், பாலா, சிவனேசன், S.S.குமார், இருதய ராஜ், நிதிஷ், அப்பாஸ் அகமது, S.குமார், சந்துரு, மணி, அப்துல் சலீம், சந்திரகுமாரி கழக செயல்வீரர்கள் அபீப் ரஹ்மான், அசார்கான் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# தாராபுரம்:ஈரான் நாட்டின் மீது அமெரிக்கா இஸ்ரேல் நடத்தும் பயங்கரவாத தாக்குதலை கண்டித்து மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம்




திருப்பூர், மார்ச்.4-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சின்னக்கடை வீதியில் அமைந்துள்ள எஸ்டிபிஐ தாராபுரம் சட்டமன்ற தொகுதி அலுவலகத்தில் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஈரான் நாட்டின் மீது அமெரிக்கா இஸ்ரேல் நடக்கும் பயங்கரவாத தாக்குதலை கண்டித்து மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் இன்று இரவு நடைபெற்றது. நடைபெற்ற மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு எஸ்டிபிஐ கட்சியின் தாராபுரம் சட்டமன்ற தொகுதி தலைவர் மன்சூர் அலி தலைமை தாங்கினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் முகமது இலியாஸ், திருப்பூர் மாவட்ட அமைப்பு பொதுச் செயலாளர் சையது அபுதாஹிர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொகுதி செயற்குழு உறுப்பினர் முகமது இஸ்மாயில் வரவேற்புரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்தும் தாக்குதலுக்கு மத்திய அரசு மவுனம் காத்து வருவதை கண்டித்தும் கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் உட்பட 80க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டனர். நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கண்டன உரையாக தொகுதி செயலாளர் மௌலானா மௌலவி முகமது இர்பான் இர்பானி கலந்துகொண்டு கண்டன கோஷங்களை எழுப்பி மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொகுதி செயற்குழு உறுப்பினர் சிக்கந்தர் பாஷா நன்றி உரையாற்றினார்.

# ஆனந்தூர் சுற்று வட்டார பகுதியில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் தடையின்றி தாராளமாக கிடைப்பதால் இளம் தலைமுறைகளின் வாழ்கை சீரழிந்து வருவதாக பெற்றோர்கள் வேதனை



ஆர்.எஸ்.மங்கலம். மார்ச்.04-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆனந்தூர் சுற்று வட்டார பகுதியில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் எளிதில் இளம் தலைமுறையினர்கள் கையில் கிடைப்பதால் படிக்கும் வயதிலேயே புகையிலை பொருட்களை பள்ளி கல்லூரிகளுக்குள் கொண்டு செல்லும் அவலம் நாளுக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது இதனால் இளம் தலைமுறைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி வருவது மட்டுமின்றி பெற்றோர்களும் மிகுந்த வேதனை அடைந்து வருகின்றனர். ஆனால் அதிகாரிகள் அவ்வப்போது பெயரளவில் மட்டுமே ஆனந்தூர் சுற்று வட்டார பகுதியில் உள்ள கடைககளில் சோதனை செய்வதால் நாளுக்கு நாள் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் தடையின்றி தாராளமாக கிடைப்பது தொடர் கதையாக உள்ளது எனவே இளம் தலைமுறையின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு புகையிலை பொருட்களை முற்றிலும் தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.



■ 'Coffee with Collector'கல்லூரி தேசிய மாணவர் படை (NCC) மாணவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், தலைமையில் நடைபெற்றது. அருகில் ஜி.டி.என். கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் சு.சரவணன், "14 தமிழ்நாடு தேசிய மாணவர் படை பட்டாலியன்" பிரிவின் ஆபிசர் கமாண்டிங் லெப்டினெட் கர்னல் சு.ஜெகதீசன் உட்பட பலர் உள்ளனர்.

# நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டம் குஞ்சப்பனை ஊராட்சிக்குட்பட்ட வெள்ளேரி கொம்பை பழங்குடியினர் கிராமத்தின் அடிப்படை வசதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டார்



நீலகிரி, மார்ச்.4-

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டம் குஞ்சப்பனை ஊராட்சிக்குட்பட்ட வெள்ளேரி கொம்பை பழங்குடியினர் கிராமத்தின் அடிப்படை வசதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டார்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டம் குஞ்சப்பனை கிராமம், வெள்ளேரி கொம்பை பழங்குடியினர் கிராமத்தை சேர்ந்த காலம் சென்ற பத்மஸ்ரீ விருது பெற்ற திரு.சு.கிருஷ்ணன் என்பவரின் சொந்த கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளான குடியிருப்புகள், நடைபாதை மற்றும் சாலை வசதிகள் உள்ளனவா என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, பழங்குடியின மக்களிடம் கலைந்துறையாடினார். மேலும், அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், வெள்ளேரி கொம்பை பழங்குடியினர் கிராமத்தை சேர்ந்த 10 குடும்பங்களுக்கு, பிரதம மந்திரி ஜென்மம் திட்டத்தின் கீழ் ஏட்டிக்காடு அல்லது சுண்டப்பட்டி பகுதியில் 10 புதிய வீடுகள் கட்டவதற்கு இடத்தினை தேர்வு செய்ய வருவாய் துறை அலுவலர்களுக்கும், சாத்தியகூறுகள் தொடர்பாக ஆராய ஊரக வளர்ச்சி துறை அலுவர்களுக்கும் அறிவுறுத்தினார். மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சுண்டப்பட்டி முதல் ஏட்டிக்காடு வரை சாலை அமைப்பதற்கு சாத்தியகூறுகள் தொடர்பாக நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்து அறிக்கை வழங்குமாறு அறிவுறித்தினார்.

மேலும், சுண்டப்பட்டி பழங்குடியினர் கிராமத்தையும், மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து, அக்கிராமத்தின் இளைஞர்களின் கோரிக்கைகளை ஏற்று விளையாட்டு உபகரணங்களை வாங்கி தருவதாக உத்திரவாதம் அளித்தார். வெள்ளேரி கொம்பை மற்றும் சுண்டப்பட்டி பழங்குடியின கிராமத்தை சார்ந்தவர்களுக்கு, ஆதார் அட்டை, மின்னணு குடும்ப அட்டை, ஜாதி சான்றிதழ்கள் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்து காப்பீட்டு அட்டை உள்ளிட்டவைகளை பெறுவதற்கு ஏதுவாக சிறப்பு முகாம் வருகின்ற ஞாயிற்றுகிழமை அன்று சுண்டப்பட்டி அங்கன்வாடி மையத்தில் நடத்திட சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறித்தினார்.

இவ்ஆய்வில், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா கோத்தகிரி வட்டாட்சியர் ராஜேஷ்வரி, பழங்குடியின வட்டாட்சியர் (கோத்தகிரி வட்டம்) மகேந்திர குமார், கோத்தகிரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவக்குமார், பிரகாஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# திண்டுக்கல்லில் பிளஸ் 2 தேர்வு மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன்,அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

திண்டுக்கல் மார்ச். 04-

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், தெரிவித்ததாவது:திண்டுக்கல் மாவட்டத்தில் பிளஸ் 2 தேர்வு எழுத 21,391 மாணவ, மாணவிகளுக்கு அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. அதற்காக திண்டுக்கல் மாவட்டத்தில் தேர்வு 88 தேர்வு மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த தேர்வு மையங்களில் 21,052 மாணவ, மாணவிகள் தேர்வு எழுதினார்கள். 339 பேர் வருகை புரியவில்லை.தேர்வு மையங்களில் மாணவ, மாணவிகளுக்குத் தேவையான குடிநீர் வசதி மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மாவட்ட அளவில் அனைத்து தேர்வு மையங்களிலும் நிலையான படை அமைத்து கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. மேலும், கல்வித்துறை அலுவலர்கள் தலைமையிலும், வருவாய்த்துறை அலுவலர்கள் தலைமையிலும் பறக்கும் படை அமைத்து தேர்வு மையங்களில் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இன்று தமிழ் தேர்வு என்பதால் ஆர்வமுடன் மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதுகின்றனர். மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் எந்த மாணவர்களும் தேர்வினை எழுதாமல் இருக்க கூடாது என்ற முறையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேர்வு குறித்து அனைத்து மாணவ, மாணவியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. காணொலிகாட்சி மூலமாக தேர்வு எழுதுவது குறித்து மாணவ, மாணவியர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் பள்ளிகள் உட்பட 88 தேர்வு மையங்களிலும் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 100க்கும் மேற்பட்ட தலைமையாசிரியர்கள் தலைமையில் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு கண்காணிப்புப் பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். அனைத்து ஏற்பாடுகளும் மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் ப.உஷா அலுவலர்கள் உடனிருந்தனர்.





# திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் குப்பநத்தம் அணையிலிருந்து விவசாய பாசனத்திற்காக 28 நாட்களுக்கு தண்ணீர் திறப்பு

திருவண்ணாமலை, மார்ச்.4-

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே உள்ள குப்பநத்தம் அணையில் இருந்து விவசாய பாசனத்திற்காக வினாடிக்கு 240 கன அடி வீதம் 28 நாட்களுக்கு 580.80 மில்லியன் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது.

குப்பநத்தம் அணையின் முழு கொள்ளளவான 59 அடியில் தற்போது அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று குப்பநத்தம் அணையில் இருந்து 47 ஏரிகளில் குறைந்துள்ள தண்ணீரின் கொள்ளளவை நிரப்பும் பொருட்டு இன்று முதல் 28 நாட்களுக்கு வினாடிக்கு 240 கன அடி வீதம் ஒரே தவனையாக 580.80 மில்லியன் கன அடி தண்ணீரை மாவட்ட ஆட்சியர் தர்பகராஜ் திறந்து வைத்தனர்.

இதன் மூலம் செங்கம் கலசப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 9808. 67 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெரும் என பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

விவசாயிகள் பாசன நீரை சிக்கனமாக சிறந்த முறையில் பயன்படுத்தி நல்ல விளைச்சல் பெற்றிட வேண்டுமென நீர்வளத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாம்பரம் மேற்கு பகுதி 64வது மற்றும் 45வது வட்ட திமுக சார்பில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை யொட்டி கழக கொடியேற்றி வைத்து பொதுமக்களுக்கு சிக்கன் பிரியாணி வழங்கினார்






தாம்பரம் மார்ச். 04-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி தாம்பரம் மேற்கு பகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாள் விழா தாம்பரம் மாநகர செயலாளரும் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் ஆர் ராஜா அவர்களின் அறிவத்தலின்படி தாம்பரம் மாநகர 64வட்ட பிரதிநிதி டி.திவாகரன் ஏற்பாட்டில் முன்னாள் நகர கழக துணைச் செயலாளர் வே.ராஜேந்திரன், வட்டக் கழகச் செயலாளர் கே.ரமேஷ்பாபு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டல குழு தலைவரும் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் கலந்து கொண்டு கட்சி கொடி ஏற்றி இனிப்பு வழங்கி பொது மக்கள் சுமார் 500 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அறுசுவை சிக்கன் பிரியாணி வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் பகுதி கழக துணைச் செயலாளரும் கழகப் பேச்சாளருமான வேலுமணி மாநகரப் பிரதிநிதி லோகேஷ், மதிஅன்பன், தர்மேந்திரன், சக்தி, குமார், டி.வெங்கடேசன், சந்திரன், ஜேபி.ராஜா மாநகர கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்

அதனைத் தொடர்ந்து தாம்பரம் மாநகர 45வது மாமன்ற உறுப்பினர் கொடி ஆர்.தாமோதரன் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டல குழு தலைவரும் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் கலந்து கொண்டு கட்சி கொடி ஏற்றி இனிப்பு வழங்கி பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் பகுதி கழக துணைச் பகுதி கழக துணை செயலாளரும் கழக பேச்சாளருமான வேலுமணி, மாநகரப் பிரதி நிதி லோகேஷ், 45வது முன்னாள் வட்ட செயலாளர் எஸ்.வி.தனசேகர் 45வது வட்ட செயலாளர் எம்.சீனிவாசகுமார், அவை தலைவர் என்.திருநாவுக்கரசு, இளைஞர் அணி டி.யோகேஷ் மாநகர கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்



## முதல்வர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைக்கு நகர திமுக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்

கிருஷ்ணகிரி, மார்ச் 4 -

மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, காவேரிப்பட்டினம் நகர திமுக சார்பில் அரசு மருத்துவமனையில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

மார்ச் 1 ஆம் தேதி காவேரிப்பட்டினம் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைக்கு, காவேரிப்பட்டினம் நகர செயலாளர் ஜே.கே. எஸ். பாபு தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. குழந்தையின் பெற்றோருக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டதுடன், குழந்தை நலப் பொருட்கள் மற்றும் தேவையான உதவிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் நகர செயலாளர் ஜே.கே.சாஜித்,மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி மாவட்ட செயலாளர் பாபா மாதையன், மருத்துவர்கள் சோமசுந்தரம்,அபிநிஷா, நகரத் துணைச் செயலாளர் விஜயகுமார்,மீனாட்சி பூங்காவனம்,பசுபதி, பாரதிராஜா,பாஸ்கர்,சபரி, கருணாநிதி,ஜெய்சங்கர், அமுதாபழனி,கோகுல்ராஜ், ராஜா,பிரகாஷ்,பசவராஜ், தென்றல் பாஸ்கர் உள்ளிட்ட பேரூராட்சி கவுன்சிலர்கள், திமுக நகர நிர்வாகிகள்,கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு, முதல்வர் பிறந்தநாளை சேவை நாளாகக் கொண்டாடினர்.

நிகழ்ச்சியின் முடிவில், சமூக நல சேவைகள் மூலம் மக்களுடன் இணைந்து செயல்படுவோம் என நிர்வாகிகள் உறுதியளித்தனர்.



■ மதுரை மாவட்டம், விரகனூர் முதல் சக்குடி வரை புதிய இணைப்பு சாலை பூமி பூஜையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு பணிகளை கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., , சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.






## குரோம்பேட்டையில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை சார்பில் செங்கல்பட்டு மாவட்ட பொதுகுழு கூட்டம் நடைபெற்றது

குரோம்பேட்டை மார்ச். 04-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த குரோம்பேட்டையில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை சார்பில் செங்கல்பட்டு மாவட்ட பொதுகுழு கூட்டம் மாவட்ட தலைவர் இம்மானுவேல் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. பொதுகுழு கூட்டத்திற்கு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் மாநில தலைவர் டைமன்ராஜா வெள்ளையன் கலந்து கொண்டு வணிகர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் எந்த பிரச்சனை வந்தாலும் ஒன்றினைந்து போரட வேண்டும் எனவும் எந்த பிரச்சனையாக இருந்தாலும், நிகழ்ச்சியாக இருந்தாலும் நான் உங்களுடன் இருப்பேன் என்றும் வருகின்ற மே 5 ஆம் தேதி நடைபெறும் மாநாட்டில் ஆடம்பர செலவை குறைத்து கொள்ள வேண்டும் என மாநாடு குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.கிச்சா ரமேஷ், பொருளாளர் ஜி.ஹரி கிருஷ்ணன் அவைதலைவர் கே.தேவராஜ், அமைப்பாளர் பாலகிருஷ்ணன், மாவட்ட செயலாளர் உமாபதி, பொருளாளர் கார்த்திக், செங்கல்பட்டு மாவட்ட மாவட்ட இளைஞரணி தலைவர் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர் அருண், மாநில செயற்குழு உறுப்பினர் முத்து, மற்றும் மாவட்ட கிளை சங்க நிர்வாகிகள், ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொது தேர்வு மாவட்ட ஆட்சித் தலைவர் தேர்வு மையங்களை ஆய்வு செய்தார்

தென்காசி மார்ச். 04-

தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் திருமதி. மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளிகளில் நடைபெற்று வரும் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், 2025 26 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகள் 02.03.2026 முதல் 26.03.2026 வரையில் நடைபெறவுள்ளது. அதனடிப்படையில் தென்காசி மாவட்டத்தில் இன்று மேல்நிலை இரண்டாம் ஆண்டுக்கான பொதுத்தேர்வுகள் 69 தேர்வு மையங்களில் மாணவர்கள் 7620, மாணவிகள் 8602 என மொத்தம் 16,222 மாணவ, மாணவிகளும், மேல்நிலை அரசு பள்ளிகள் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகள் என 154 பள்ளிகள் மற்றும் தனித்தேர்வர்கள் தேர்வு எழுத விண்ணப்பித்துள்ளார்கள். 7540 மாணவர்களும், 8547 மாணவியர்களும் என மொத்தம் 16,087 நபர்கள் தேர்வு எழுதினார்கள். 78 மாணவர்களும், 55 மாணவியர்களும் என மொத்தம் 133 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதவில்லை. 02 மாணவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.



இத்தேர்வுப்பணிக்கு 69 முதன்மை கண்காணிப்பாளர்கள், 72 துறை அலுவலர்கள் மற்றும் 1010 அறைக் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், 92 நிலையான படை உறுப்பினர்கள் மற்றும் 4 பறக்கும் படை உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இரண்டு வினாத்தாள் கட்டுக் காப்பு மையங்களிலிருந்து 17 வழித்தடங்களில் வினாத்தாள் கட்டுகளை ஆயுதம் தாங்கிய காவலர்களுடன் பாதுகாப்பாக எடுத்துச் செல்ல 17 வழித்தட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தென்காசி மாவட்டத்திற்கு எம்.கே.சி.சுபாஷினி, இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்புத்துறை) அவர்கள் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி.ரேணுகா மற்றும் தலைமையாசிரியர்கள் உடனிருந்தனர்.

## காவேரிப்பட்டினத்தில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் விற்கும் கடைகளில் திடீர் சோதனை: 300 கிலோ பறிமுதல், அபராதம் விதிப்பு

கிருஷ்ணகிரி,மார்ச். 04-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனைக்கு எதிராக திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் உத்தரவின்படியும், பேரூராட்சி செயல் அலுவலர் ராணி அவர்களின் ஆலோசனையின் பேரிலும், பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து இந்த சோதனையை நடத்தினர்.



காவேரிப்பட்டணம் பகுதிகளில் இயங்கி வந்த பல பிளாஸ்டிக் கடைகளில் ஆய்வு மேற்கொண்ட போது, 300 கிலோவுக்கும் அதிகமான தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. தமிழக அரசின் உத்தரவை மீறி இவ்வகை பொருட்களை சேமித்து விற்பனை செய்த கடை உரிமையாளர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டது.

இனி இதுபோன்ற தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்யக் கூடாது என கடை உரிமையாளர்களுக்கு அதிகாரிகள் கடுமையான எச்சரிக்கை விடுத்தனர். தொடர்ந்து இதுபோன்ற சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தனர்.

மேலும், "பிளாஸ்டிக்கை ஒழித்து மஞ்சள் பையை பயன்படுத்துவோம்" என்ற தமிழக அரசின் விழிப்புணர்வு வாசகத்துடன் வீதிகள் தோறும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. பிளாஸ்டிக் பயன்பாட்டால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் பேரூராட்சி நிர்வாகம் மேற்கொண்ட இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.



■ கழகத்தின் நிரந்தர பொதுச்செயலாளர் மாண்புமிகு எடப்பாடி திரு K.பழனிச்சாமி அவர்களின் ஆனைக்கினங்க இந்தியாவின் இரும்பு பெண்மணி தங்கத்தாரகை டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாதவரம் 28வது வட்ட கழக செயலாளர் ஜெ.குமரவேல் அவர்களின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் மாதவரம் திரு சூ.மூர்த்தி அவர்கள் கலந்துக் கொண்டு கழக கொடி ஏற்றி 1000 பேருக்கு அன்னதானம் வழங்கினார் இதில் மாதவரம் கிழக்கு பகுதி கழக செயலாளர் திரு வி.கண்ணதாசன் மற்றும் கழக நிருவாகிகளும் பொது ம்க்களும் திரலாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.





## புதிய நூலகம் திறப்பு விழா

பெரியகுளம் மார்ச். 04-

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே தெ.கள்ளிப்பட்டி அம்பேத்கர் நகரில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் தேனி மாவட்ட பொருளாளர் கவிஞர் அருண்அழகு லதா ஆகியோரின் இல்லத்தில் புதியதாக கட்டியுள்ள உரையாடல்_நூலகத்தை முன்னாள் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க தேனி மாவட்ட பொருளாளர் கவிஞர் யாழ் தண்விகா ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.இந்நிகழ்ச்சியில் எழுத்தாளர் ஏர். மகாராசன், தொல்லியல் ஆய்வாளர் பேராசிரியர் மாணிக்கராஜ், கோடை பண்பலை அறிவிப்பாளர் ரங்கநாதன், எழுத்தாளர் தமிழ் வேந்தன், சமூக ஆர்வலர் சுந்தர்ராஜன், ஜெய் பீம் அறக்கட்டளை செயற்குழு உறுப்பினர்கள் பிரியா, பிரியதர்ஷினி, சுவேதா முத்து செல்வம்,

ஜெனேடிக் ஸ்டுடியோ உரிமையாளர் கனி முத்து மற்றும் கே.வி கேண்டின் உரிமையாளர் வினோத்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.கவிஞர் அருண் அழகு பேசுகையில் "இந்த

உரையாடல் நூலகத்தில் கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள்,பொதுஅறிவு,கணினி அறிவு, வரலாற்று நூல்கள், குழந்தைகளுக்கான நூல்கள், சுய வரலாற்று நூல்கள் என பலதரப்பட்ட நூல்களின் களஞ்சியமாகவும் இங்கு உள்ளது. வருகின்ற விடுமுறை நாட்களில் மாணவர்களுக்கு இலவச பயிற்சி கூடமாக நடைபெற உள்ளது.ஆகவே கோடை விடுமுறை நாட்களில் மாணவர்கள் தொலைக்காட்சி மற்றும் செல்போனில் மூழ்காமல் உரையாடல் நூலகத்தை பயன்படுத்துவார்கள் என நம்புகிறேன்" என்று கூறினார்.நிகழ்ச்சியின் முடிவில் லதா அருண் நன்றி கூறினார்.

## National Innovation Foundation - India INSPIRE–MANAK விருது: கிருஷ்ணகிரி மாணவி ஸ்ரீதேவிக்கு ரூ.10,000 பரிசுத்தொகை

கிருஷ்ணகிரி, மார்ச்.4-

கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த காவேரிப்பட்டினம் போத்தாபுரம் அரசினர் நடுநிலைப்பள்ளி 8ஆம் வகுப்பு மாணவி ஸ்ரீதேவி, அறிவியல் புதுமைகளை ஊக்குவிக்கும் INSPIRE–MANAK திட்டத்தின் கீழ் ரூ.10,000 பரிசுத்தொகைக்குத் தேர்வாகியுள்ளார். இவரது INSPIRE Reference No.: 25TN5596352 (25.02.2026) ஆகும்.



இந்தத் திட்டம் Department of Science and Technology (விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறை), இந்திய அரசின் கீழ் செயல்படும் National Innovation Foundation - India மூலம் செயல்படுத்தப்படுகிறது. "Million Minds Augmenting National Aspiration and Knowledge (MANAK)" என்ற நோக்கத்துடன் பள்ளி மாணவர்களின் புதுமை சிந்தனைகளை கண்டறிந்து வளர்க்கும் முயற்சியாக INSPIRE–MANAK முன்னெடுக்கப்படுகிறது.

2025–26 கல்வியாண்டிற்காக தேர்வான ஸ்ரீதேவி, அறிவியல் திட்டம்/மாதிரி (Science Project/Model) தயாரித்து, மாவட்ட கல்வி அதிகாரி தலைமையில் நடைபெறும் மாவட்ட அளவிலான கண்காட்சி மற்றும் திட்டப் போட்டிகளில் (DLEPC) பங்கேற்க உள்ளார்.

மாணவி ஸ்ரீதேவியின் இந்த சாதனை, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளது. இவரது அறிவியல் ஆர்வமும் புதுமை திறனும் மேலும் வளர்ந்து, மாநில மற்றும் தேசிய மட்டங்களில் சிறந்து விளங்க பள்ளியின் தலைமை ஆசிரியை மணிமேகலை மாணவிக்கு சால்வை அறிவித்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்.Inspire award 202526 போட்டியில் பங்கு பெற்ற போத்தாபுரம் பள்ளி 8ஆம் வகுப்பு மாணவி ஸ்ரீ தேவி அவர்கள் " Seed Ball dispenser for reforestation"என்ற தலைப்பில் பதிவு செய்த ஆய்வு

கட்டுரை தேர்வாகி உள்ளது மனைவியை தலைமை ஆசிரியர் மணிமேகலை அறிவியல் ஆசிரியர் மற்றும் உதவி தலைமை ஆசிரியர் பாலுசாமி. ஆங்கில ஆசிரியை அனிதா கிறிஸ்டி, ஆய்வு வழிகாட்டி ஆசிரியர் ழி. அருணா, ஆசிரியர்கள் காயத்ரி , சுகந்தி மற்றும் மஞ்சுநாதன் ஆகியோர் பரிசளித்து பாராட்டினர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161